**தலைப்பு 325 – இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 325 – இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 20 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(இ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.2.1 |
| | | 2. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தாமை மற்றும் மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 5 |
| | | 3. ஏனைய திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் குறைப்பயன்பாடு | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | 1. விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டுடைய சொத்துக்கள் நிலவுகின்றமை.<br>2. ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் | 2.3.1<br>2.3.2 |
| 128(1)(ஐ) | அரசாங்க பணிகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்களம், செயற்திறன், சரியான தன்மை மற்றும் நேர்மை ஆகிய விடயங்கள் தொடர்பில் உரிய கவனத்துடன் தமமு திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்கின்றமை. | 1. செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்<br>2. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.1.1<br>2.4(அ), (ஆ),(இ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 கடமைப் பொறுப்புகளை நிறைவேறாமை

**செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரதான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | | ரூபா.மில்லியன் | |
| (அ) | உயர் பயிற்சி நிலைய கட்டிட நிர்மாணம் - மிரிஸ்ஸ | 53.1 | 2017.01.01 | 30.09 | 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதிய MOD/DEF/13/27/AD ஆம் இலக்க அமச்சுச் செயலாளரின் கடிதத்தின் மூலம் நிர்மாணத்தை நிறுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | பயிலுனர் கப்பலோட்டிகளுக்கான கட்டிடத்தினை நிர்மாணித்தல் - மிரிஸ்ஸ | 34.5 | 2017.01.01 | 4.1 | - மேற்படி - |

## 2.2 பெறுகை நடைமுறையை பின்பற்றி வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

### பெறுகை நடைமுறையை அமுல்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெறுமதி ரூபா 1,014,291 மற்றும் ரூபா 1,431,668 தொகையான Rigid Hull Inflatable Boat இரண்டு விநியோகத்தரால் 11 முதல் 15 வாரங்கள் கொண்ட கால தாமதத்துடன் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் அதற்குரிய ரூபா 154,812 தொகையான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) ரூபா 32.99 மில்லியன் பெறுமதியான CG 410 இலக்கம் கொண்ட படகு 2016 ஒக்தோபர் மாதம் முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயலற்றுக் காணப்படுகின்ற போதிலும், அதனை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2018 மே 20 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. நீண்ட காலமாக படகு ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அதன் உள்ளக பாகங்கள் மற்றும் ஏனைய பாகங்களுக்கும் சேதம் ஏற்படுத்துவதற்கான சாத்தியம் காணப்படுகிறது எனவும், அதற்கமைய திணைக்களத்தின் செயற்றிறன் அடையப்பெறாமை தொடர்பில் போதியளவில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது CG 406 படகானது ரூபா 2.10 மில்லியன் செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 47 மணித்தியாலங்கள் எனும் மிகவும் குறுகிய காலம் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இந்த படகு செயற்திறனுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

(அ) திணைக்களத்தினால் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய 0.1517 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி 2011 யூன் 27 ஆந் திகதி முதல் 2018 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது.

(ஆ) கல்வித் திணைக்களத்திற்குரிய 1.1285 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியொன்றிலும் திக்ஹோவிட்ட மீன்பிடித்துறைமுகத்திற்குரிய 0.1517 ஹெக்டேயர்கள் பரப்பளவான இரு காணித் துண்டுகளின் காணி மற்றும் கட்டிடங்களின் அபிவிருத்திக்காக ரூபா 30.80 மில்லியன் பணம் செலவிடப்பட்டிருந்தது.

### 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக படகுகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் பல்வேறு வகையான படகுகளை கொள்வனவு செய்தல் அவசியமானதென தெரிவித்து ரூபா 17 மில்லியன் மேலதிக நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கான முன்வைக்கப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பட்டியலுக்கு புறம்பாக ஏனைய விடயங்களை கொள்வனவை செய்வதற்காக அந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொருட்கள் பெறப்பட்டதன் பின்னர் அவற்றின் தரம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்த அறிக்கைகள் திருப்திகரமானதெனில் மாத்திரம் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 8.06 மில்லியன் பெறுமதியான 07 கொள்வனவுகள் தொடர்பில் திணைக்களத்தினால் தரப் பரிசோதனை அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் வழங்குநர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) உரிய பணியொன்று அல்லது சேவை நிறைவு செய்யப்படாது நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 இன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 11,484,403 கூட்டுப்பெறுமதியான 7 காசோலைகள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் வழங்கப்பட்டிருந்தன.

### 2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 31.41 | 24.34 | 7.07 | 22.51 |
| | மூலதனம் | 62.39 | 43.82 | 18.57 | 29.77 |
| | **மொத்தம்** | **93.80** | 68.16 | **25.64** | **27.34** |
| **2014** | மீண்டுவருபவை | 32.66 | **28.41** | 4.25 | 13.01 |
| | மூலதனம் | 32.00 | 31.12 | 0.88 | 2.75 |
| | **மொத்தம்** | **64.66** | 59.53 | **5.13** | **7.94** |
| **2015** | மீண்டுவருபவை | 32.27 | **30.62** | 1.65 | 5.11 |
| | மூலதனம் | 104.65 | 38.76 | 45.90 | 43.86 |
| | **மொத்தம்** | **136.92** | **89.38** | **47.54** | **34.72** |
| **2016** | மீண்டுவருபவை | 39.27 | 37.82 | 1.45 | 3.70 |
| | மூலதனம் | 37.77 | 32.49 | 5.28 | 13.97 |
| | **மொத்தம்** | 77.04 | 70.31 | **6.73** | **8.74** |
| **2017** | மீண்டுவருபவை | **40.21** | **35.82** | 4.39 | 10.93 |
| | மூலதனம் | 289.40 | 196.08 | 93.32 | 32.25 |
| | **மொத்தம்** | **329.61** | **231.90** | **97.71** | **29.64** |

மீளாய்வாண்டின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,700,000 தொகையான தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 27 சதவீதம் முதல் 87 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

### 2.6 ஏனைய திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

இலங்கை கடற்படையினால் சீருடை கொள்வனவிற்காக ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றுள் ரூபா 0.97 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 4.03 மில்லியன் அல்லது 80.7 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.7 மனிதவள முகாமைத்துவம்

திணைக்களத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பிறிதொரு பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை கடற்படையின் 90 உத்தியோகத்தர்கள் மற்றும் 1213 கடற்படையினர் இரட்டை அடிப்படையில் இணைப்பு செய்யப்பட்டிருந்தனர்.